//தனி கவனம் //

**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.4380 /ஆ4/2025 நாள்.10.08.2026**

**பொருள் :** தேர்வுகள்–வேலூர் மாவட்டம் –பத்தாம் வகுப்பு மார்ச்/ஏப்ரல் – 2026 –அசல் மதிப்பெண் சான்றிதழ்கள் மாணவர்களுக்கு வழங்குவது தொடர்பான அறிவுரைகள் வழங்குதல் – தொடர்பாக

**பார்வை :** சென்னை அரசு தேர்வுகள் இயக்குநரின் 000326/ பி4 /2026 நாள் .07.08.2026

*********

பார்வையில் காணும் சென்னை அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் கடித ஆணையின்படி மார்ச்/ஏப்ரல் – 2026 –ல் நடைபெற்று முடிந்த பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதி மாணவர்களின் அசல் மதிப்பெண் பட்டியல் கீழ்க்காணும் அட்டவணையின்படி வழங்கப்படவுள்ளது. தங்கள் பள்ளியில் பயின்ற அனைத்து மாணவர்களின் அசல் மதிப்பெண் சான்றிதழ்கள் பெற்றுக்கொள்ள சார்ந்த பள்ளி தலைமையாசிரியர், மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் முகப்புக் கடிதத்துடன் மாணவர்களின் எண்ணிக்கை விவரத்துடன் வருகை புரிந்து பெற்றுக்கொள்ளவேண்டும். அசல் மதிப்பெண் சான்றிதழ்கள் பெற்றுக்கொள்ள அமைச்சுப்பணியாளர்களோ அல்லது அடிப்படை பணியாளர்களோ அனுப்ப கூடாது என திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

**குறிப்பு** : பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வெழுதிய பள்ளி மாணவர்கள் / தனித்தேர்வர்களின் மதிப்பெண் சான்றிதழ்களை மாவட்டக்கல்வி அலுவலர்களிடம் பள்ளித்தலைமையாசிரியர்கள் பெற்றுக் கொண்ட பின்பு தங்கள் பள்ளி மாணவர்களின் அனைத்து மதிப்பெண் சான்றிதழ்களும் பெறப்பட்டுள்ளனவா என்பதை சரிபார்த்து இணைப்பில் கண்ட ஒப்புகைச் சான்றினை பூர்த்தி செய்து பள்ளி முத்திரையுடன் கையொப்பம் இட்டு வேலூர்,கல்புதூர், அரசுத் தேர்வுகள் அலுவலகத்தில் 14.08.2026–க்குள் ஒப்படைத்திட அனைத்து பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

| வ.எண் | நாள் | ஒன்றியம் | இடம் | நேரம் |
|---|---|---|---|---|
| 1 | 11.08.2026 | குடியாத்தம் | ஹோலிகிராஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி சத்துவாச்சாரி ,வேலூர் | காலை 10.00 மணி முதல் 11.00 மணி வரை |
| 2 | | பேர்ணாம்பட்டு | | |
| 3 | | கே.வி.குப்பம் | | |
| 4 | | அணைக்கட்டு | | |
| 5 | | வேலூர் நகர் | ஹோலிகிராஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி சத்துவாச்சாரி ,வேலூர் | காலை 11.00 மணி முதல் பிற்பகல் 12.00 மணி வரை |
| 6 | | வேலூர் புறநகர் | | |
| 7 | | கணியம்பாடி | | |
| 8 | | காட்பாடி | | |

//ஓம்.//
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்,
அனைத்து மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள்

நகல்:

- வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர்(இடைநிலை/தனியார் பள்ளிகள்) தொடர்நடவடிக்கையின் பொருட்டு அனுப்பப்படுகிறது.
- வேலூர்,அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
- முதல்வர் ,ஹோலிகிராஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி,சத்துவாச்சாரி,வேலூர்.